செய்தி வெளியீட்டு எண்.48 நாள்: 12.1.2010

# அரவாணிகளுக்கு நலத்திட்ட உதவிகள், ஊனமுற்றோர்களுக்கு மோட்டார் பொருத்திய வாகனங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு புதிய வாகனங்கள் துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

தமிழகத்தில் அரவாணிகளுக்கு நலவாரியம் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்காக மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றது. அரவாணிகளுக்கு நலவாரிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. அரவாணிகள் நலவாரியத்தின் மூலம் கல்வி உதவி மற்றும் சொந்தமாக தொழில் தொடங்குவதற்கு நிதி உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றது. அரவாணிகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரவாணிகளைக் கொண்டு 61 சுயஉதவிக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் அரவாணிகள் தங்குவதற்காக குறுகிய கால தங்கும் இல்லம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இன்று (12.1.2010) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், அரவாணிகளைக் கொண்டு அழகு ஆபரணம் தயாரிக்கும் மையம் தொடங்குவதற்காகவும், அரவாணிகள் சொந்தமாக தொழில் தொடங்குவதற்காகவும் காசோலைகளை வழங்கினார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உத்தரவின்படி, 2007ஆம் ஆண்டு முதல் கடும் ஊனமுற்ற மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகவும், பணிக்குச் செல்லும் கடும் ஊனமுற்றோர்களுக்கு மானியத்துடனும் மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் (Scooter) வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 120 ஊனமுற்ற மாணவ, மாணவியர்களுக்கும், பணிக்கு செல்லும் 581 கடும் ஊனமுற்றவர்களுக்கும் மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், ஊனமுற்றோர் நலத்துறையின் சார்பில் ஊனமுற்ற நபர்களுக்கு மோட்டார் பொருத்திய வாகனங்களை வழங்கினார்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளை செவ்வனே செயல்படுத்தும் வகையிலும், திட்டப் பணிகள் உரிய பயனாளிகளுக்கு சென்று அவர்கள் பயன்பெறுவதை மேற்பார்வை செய்ய ஏதுவாகவும், மாவட்ட திட்ட அலுவலங்களின் பயன்பாட்டிற்காக 20 வாகனங்களை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறைச் செயலாளர் திரு.பா. ராமமோகன் ராவ், சமூகநலத்துறை ஆணையர் திருமதி. எம்.பி. நிர்மலா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட சிறப்பு ஆணையர் திருமதி. மீனாட்சி ராஜகோபால், ஊனமுற்றோர் நலத்துறை ஆணையர் திரு.ச. விஜயராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.